மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.




இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk





# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 16

- ★ இரத்த அழுத்த குறைப்பான்கள்
- ★ மறுபிறப்பும் ஞானஸ்நானமும்
- ★ தேவனுடைய வாக்குத்தத்தங்களின் ஆதாரம்
- ★ என் வாழ்வை மாற்றின நாட்கள்
- ★ செயல்கள் பேசும்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation

இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்

ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்

பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*“இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2. கொரிந்தியர் 5:17).*



# இரத்த அழுத்த குறைப்பான்கள்

1. ஜெபம் செய்.
2. நேரத்துடன் படுக்கைக்குச் செல்.
3. நேரத்தோடு எழுந்திரு, அப்படி செய்தால் நிதானமாக நாளை துவங்கலாம்.
4. உனது காலவரம்பிற்குள் அடங்காத அல்லது மனஉளைச்சலைத் தருகின்ற திட்டங்களை வேண்டாம் என்று ஒதுக்கிவிடு.



5. திறமையுடன் செய்யக்கூடிய மற்றவர்களுக்கு வேலைகளை ஒப்படை.
6. வாழ்க்கையை எளிதாகவும் ஒழுங்கானதாகவும் நடத்து.
7. குறைவாக வைத்திருப்பதே அதிகம் (ஒன்று அனேக சமயங்களில் போதாததாக இருந்தாலும், இரண்டு அனேக சமயங்களில் அதிகமாய் இருக்கும்).
8. காரியங்களைச் செய்யவும் பல இடங்களுக்குச் செல்லவும் கூடுதல் நேரத்தை ஒதுக்கு.
9. நிதானமாக இரு. பெரிய மாற்றங்களை விரிவாக்கு, கடினமான திட்டங்களுக்கு அதிக நேரம் கொடு, கடினமான எல்லாவற்றையும் ஒன்றாக குவித்துக் கொள்ளாதே.
10. ஒவ்வொரு நாளையும் தனித்தனியே எதிர்நோக்கு.
11. கவலைகளைச் சிரத்தையுள்ள காரியங்களிலிருந்து வேறுபடுத்து, சிரத்தையான சூழ்நிலையில் தேவன் உன்னை என்ன செய்ய விரும்புகிறார் என்று கண்டுபிடி. விசாரங்களை விலக்கு, ஒரு சூழ்நிலையை குறித்து எதையும் செய்ய முடியாவிட்டால் அதை குறித்து மறந்துவிடு.
12. வரவுக்குள் செலவுசெய், கடன் எடுக்கும் அட்டைகளை (கிரெடிட் கார்ட்ஸ்) சாதாரண பொருட்களை வாங்க உபயோகிக்காதே.
13. சமயத்திற்கு உதவும் பொருட்களை வைத்திரு. உன் பையில் இன்னொரு கார்சாவி, தோட்டத்தில் புதைத்திருக்கும் இன்னொரு வீட்டுசாவி, உபரி தபால் வில்லைகள் (ஸ்டாம்ப்ஸ்) வைத்திரு.
14. கே.எம்.எஸ் (கீப் மௌத் ஷட்) வாயை மூடிக்கொண்டு இரு அல்லது பேசாமல் இரு. இந்தச் சிறிய புத்திமதி அனேக தொந்தரவுகளை அகற்றும்
15. உனக்குள் இருக்கும் குழந்தை மனதிற்கு தினமும் ஏதாவது செய்.

16. வரிசையில் நின்று காத்திருக்கும் நேரத்தில் படிப்பதற்காக எப்பொழுதும் ஒரு வேதத்தை உன்னுடன் வைத்திரு.
17. தேவையான அளவிற்கு உடற்பயிற்சி செய்.
18. சரியான உணவு உட்கொள்.
19. எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்து. அப்பொழுதுதான் அது அதனதின் இடத்தில் இருக்கும்.
20. வாகனத்தை ஓட்டும்போது டேப்போட்டு கேட்கும் பழக்கம் உன் வாழ்க்கை தரத்தை உயர்த்தும்.
21. உன் உள்உணர்வுகளையும் சிந்தைகளையும் எழுதிவை.
22. ஒவ்வொரு நாளும் தனிமையில் இருக்க சிறிது நேரம் ஒதுக்கு.
23. பிரச்சனையா? அச்சமயத்திலேயே தேவனுடன் பேசு, சிறிய தொல்லைகளை முளையிலேயே கிள்ளி எறி, அதற்காக ஜெபிக்கும் முயற்சிக்கு படுக்கைக்கும் போகும்வரை காத்திராதே.
24. தேவபிள்ளைகளுடன் நட்புறவு கொள்.
25. பிடித்தமான வேதவசனங்களை எழுதி கைகளில் உடனே கிடைக்கும்படியாக வை.
26. நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே உள்ள சிறிய பாலம் எப்பொழுதும் “நன்றி, அருமை ஆண்டவரே” என்பதை நினைவில் வை.
27. சிரி.
28. இன்னும் கொஞ்சம் சிரி.
29. உன் வேலையை அதிகக் கவனமாக எடுத்துக்கொள், ஆனால் உன்னை குறித்தோ அப்படி அல்ல.
30. மன்னிக்கும் குணத்தை அதிகரி (அனேகர் அவர்களால் முடிந்த அளவு மிக நன்றாக செய்கின்றனர்).
31. இரக்கமற்றவர்களிடம் இரக்கமாயிரு (அவர்களுக்குத்தான் அது அதிகம் தேவை).
32. சுயத்தைச் சாகடி அல்லது தன்னலத்தைக் கைவிடு.
33. பேசுவதை குறை, கேட்பதை அதிகரி.
34. நிதானமாக இரு.
35. இந்த சர்வபூமியின் பொதுமேலாளர் நீ அல்லவென்பதை உனக்கு நினைவுபடுத்து. அதின் அதிகாரியாகிய தேவனே அதை ஆளுகை செய்கிறார்.
36. ஒவ்வொரு இரவும் படுக்கைக்குச் செல்லும் முன்னர், நீ இதுவரை நன்றியோடு இல்லாமல் இருந்த ஒவ்வொரு காரியத்திற்காகவும் நன்றிசெலுத்து.



# மறுபிறப்பும் ஞானஸ்நானமும்

இயற்கையாக மனிதன் மரணத்திற்கே உரியவன் அவன் மரணத்தைத் தன் சம்பளமாகப் பெற்று இருக்கிறான் (ரோமர் 6:23). மரணத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு. அது என்னவென்றால் மரிப்பது. இதை விசுவாசி ஞானஸ்நானத்தின் மூலம் செய்கிறான்.



‘‘*கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?*”

“*மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே*” (ரோமர் 6:3,7). ஆனால் உண்மையான ஞானஸ்நானம் என்பது இயந்திரமாக செய்யப்படும் செயலைவிட மேலானது. அது ஞானஸ்நானத்திற்கு முன்னர் விசுவாசத்தாலும் ஞானஸ்நானத்திற்கு பின்னர் கீழ்ப்படிதலினாலும் உறுதிப்படுத்தபடுகிறது. இல்லாவிட்டால் அது ஒரு அர்த்தமற்ற காரியமாகும்.

ஆனால் மரணத்திற்கு தப்பித்துக் கொண்டவர்களுக்கு நடக்கவிருக்கும் சம்பவமாக இருந்தாலும் - அது ஒரு ஆச்சரியமான ஆசீர்வாதமாகும்.

“*ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாய் இருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பில்லை*”.

“*கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே*” (ரோமர் 8:1,2).

எப்படி தேவன் நம்மை கிறிஸ்துவின் மூலமாய் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கினார்?

“*அதெப்படியெனில் மாம்சத்தினாலே பலவீனமாய் இருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு தம்முடைய குமாரனை பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்*” (ரோமர் 8:3).

தேவன் மனிதனை இவ்விதமான அடிமைத்தனத்தினின்று

விடுதலையாக்கும்படி செய்த முதல் காரியம் மாம்சத்தின் சாயலாக குமாரனை ஜெநிப்பித்ததே ஆகும்.

அவர் சரீரத்தின்படி "மாம்சத்தில்" இருந்தாலும் மாம்சத்தின்படி நடவாமல் (வசனம் 5) அதற்கு பதிலாக அவர் ஆவிக்குரியவைகளை சிந்தித்துக் கொண்டிருந்த படியால் "ஆவியின்படி நடந்தார்" (வசனம் 5) அவ்விதமாக செய்து நாம் பின்பற்ற வேண்டிய மாதிரியை தந்தார்.

கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றும்போது நாம் மறுபடியும் பிறக்கின்றோம். சரீரத்தின்படி நாம் மாம்சத்தில் இருந்தாலும் - இப்படி மாம்சத்தில் இருப்பதை நிகழ்காலத்தில் எதாலும் மாற்றமுடியாது - "நாம் கிறிஸ்துவின் ஆவியினால்'' (வசனம் 9) நடத்தப்படவேண்டும். வேறு வார்த்தையில் சொல்வதானால் கிறிஸ்து மறுபடியும் நமக்குள் "பிறந்திருக்கிறார்" (வசனம் 13) நாம் புதிய சிருஷ்டிகளாக மாற்றப்படுகிறோம். நாம் ஆவியினால் நடத்தப்படுகிறோம். (வசனம் 14). அற்புதங்களினால் நாம் ஆவியில் பிறவாமல், இவ்விதமான ஆவியினால் அதாவது கிறிஸ்துவின் உபதேசத்தாலும், முன் உதாரணத்திலுள்ள ஆவியினாலும் நடத்தப்படவேண்டும். இவ்விதமான பாதையை பின்பற்றும்போது நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாற்றப்படுகின்றோம். அவ்விதமாக மாறும்போது அநேக ஆண்டுகளுக்கு முன்னர் பெத்லகேமில் பிறந்த அவருடைய முதற் பேறான குமாரனின் சாயலுக்கு ஒப்பாக மாறுகிறோம்.

ஆவியின் மேன்மையான வசனத்தினாலே யோவானும் கிறிஸ்துவின் பிறப்பை நமது "மறுப்பிறப்பாக" விளக்குகிறார்.

*"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்"* (யோவான் 1:12).

ஆம், சந்தேகமின்றி இயேசு தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தும் "மாம்சமான வார்த்தை ". ஆவியினால் நாம் மறுபடியும் பிறக்கும்போது நாமும் ''வார்த்தை மாம்சமானவர்கள்'' என்று வசனங்கள் 12, 13 கூறவில்லை. அவ்வசனங்களைக் குறித்து வேறு வார்த்தையில் சொல்வதானால், நாம் வார்த்தையைப் படித்து, கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் நம்பிக்கை வைத்து, அவருடைய கொள்கைகளை நம் வாழ்க்கையில் செயல்படுத்தும்போது, தேவன் தமது வார்த்தையை நம்மில் பதியச் செய்கிறார். அவ்விதமாக நடைபெறும் போது நாமே தேவனுடைய எழுத்தாக மாறுகிறோம்.

**உலகத்தின் மறுபிறப்பு**

பவுல் சித்தரிக்கின்றார் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனை படுவதாக. இவ்விதமான சர்வலோகத்தின் ஆவலை விளக்க இயலாது. இந்த ஆவல் தேவனுடைய திட்டம், அவருடைய பிள்ளைகள் பிறப்பதின் மூலமாக நிறைவு பெறவேண்டும்.

"மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது".





*''அதேதென்னவென்றால், சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத் தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே தவிக்கிறது".*

*''அந்த சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது".*

''ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது".

"அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமும்கூட நம்முடைய சரீர மீட்மாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்கு காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்" (ரோமர் 8:19-25).

இவ்விதமான ''பிள்ளைகள்'' விடியற்காலத்து கர்ப்பத்தில் பிறக்கும் பனியைபோல் பிறப்பார்கள் (சங்கீதம் 110:3) "மண்ணிலே தங்கி இருக்கிறவர்களும் மரித்த "தேவனுடையவர்களும்" விழித்து பூமியின் மேல் பெய்யும் பனியைப் போல மகிழ்ச்சியினால் பாடுவார்கள்" (ஏசாயா 26:17-19 ஆர்.எஸ்.வி.).

**சகலமும்**

*"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்".*

*"தம்முடைய குமாரன் அனேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராக இருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்''* (ரோமர் 8:28-29).

சகலமும் என்பதில் பாடுகளும் துன்பங்களும் அடங்கும். இவைகள் தேவன் தம் பிள்ளைகளுக்கு வைத்துள்ள பொதுவான நோக்கத்தில் இடம்பெறுகிறது. இந்த நோக்கம் அவர்களை ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறி செல்ல அழைக்கிறது. மேலும் அவருடைய முதற்பேறான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மாற்றுகிறது. அவரும் தாம் பட்டபாடுகளினாலேயும் சோதனைகளினாலேயும் அவ்வித குணாதிசய முள்ளவரானார் (எபிரேயர் 5:7-9). கிறிஸ்துவைப் பற்றிய அறிவாலும் அவரின் குணாதிசயங்களை ஆர்வத்துடன் பின்பற்றுவதாலும் நாம்

நம் பாவங்களுக்காக மரித்து, தேவனுடைய நீதியின்படி வாழ மறுபடியும் பிழைத்தும் இருக்கிறோம் (1 பேதுரு 2:10-25).

*“இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?*

*தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடுகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?*

“கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?” (ரோமர் 8:31-35).

## மறுபடி பிறந்த வாழ்க்கை



“ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சினேகமுள்ளவர்களாகும்படி ஆவியினால் சத்தியத்திற்குக் கீழ்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்”.

*“அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே” (1. பேதுரு 1:22-23).*

கிறிஸ்து பரிசுத்த ஆவியின் விசேஷித்த வல்லமையினாலே உற்பவித்து பிறந்தார். நாமும், தேவனுடைய பரிசுத்த ஆவியின் வார்த்தை நம்முடைய இருதயத்திலே கிரியை நடப்பிக்கும் போது “தேவனுடைய பிள்ளைகளாக” மாறுகிறோம். அழிவில்லாத வித்து நமது மனதிலே விதைக்கப்பட்டு, முழுவதும் வேறுபட்ட ஒரு செடியிலே வேர் ஊன்றுகிறது. அது வசனம் 24ல் வரும் இயற்கையான புல்லையும் பூவையும் போன்றதல்ல. ஏனெனில் அதற்கு என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் வல்லமை உண்டு. (வசனம் 25) இவ்விதமாக மாத்திரமே இப்பொழுது விசுவாசிகளுக்கு நித்திய ஜீவன் உண்டு. (1. யோவான் 5:12-13)

கிறிஸ்து உங்களில் “பிறந்து” இருக்கிறார் என்று தொடர்கிற பேதுரு முதலில் “குழந்தை தான்”. எனவே அவர் கூறுகிறார்: “புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல்” நீங்கள் ஞானப்“பாலின்”மேல் வாஞ்சையாய் இருக்கவேண்டும். (1. பேதுரு. 2:2) பெத்லகேமிலே பிறந்த கர்த்தரை விசுவாசித்து, அவர் கிருபையில் நிலைத்திருந்து, உங்கள் நேரத்திற்காகக் காத்திருங்கள். இயேசுவும் உங்களுக்கு முன்னர் அவ்விதமே செய்தார். இயேசுவைப் போலவே பின்னர் ஒரு வளர்ச்சியுடைய முதிர்ந்த பிள்ளையாக கர்த்தருக்குள் வளருங்கள்.



முதலில் கிறிஸ்து புதிதாக ஒரு குழந்தையாகவே மாட்டு தொழுவத்தில் நமக்குக் காட்சி அளிக்கிறார். நாமும் அவ்விதமாகவே “புதிதாகப் பிறந்த” குழந்தைகளைப் போல, மகிமையான சுவிசேஷத்தினால் முதலில் அழைக்கப்பட்ட போது இருந்தோம். எனினும் குழந்தையைப் போலவே பெலனுள்ள இளைஞனான வளரவும், முடிவிலே முதிர்ந்த ஒரு மனிதனாக மாறவும் - நாமும் மாறக் கூடிய ஒரு எதிர்காலத்தை பற்றிய ஒரு ஆச்சரியமான நம்பிக்கை உண்டு. நமது விசுவாசமும் ஒழுக்கமும் வளரவேண்டும். நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் அறிவிலும், கிறிஸ்துவினுடைய நிறைவின் வளர்ச்சியின் அளவுக்குதக்க பூரண புருஷராகும் வரைக்கும் வளர வேண்டும் (எபேசியர் 4:13).

இது நடக்ககூடியது எப்பொழுது என்றால், நாம் நமது பயிற்றி கால ஆரம்பத்திலேயே, முடிவாக இருக்கும் பூரணரான கிறிஸ்துவை பார்க்கும்போது இது ஒருவேளை கடினமான காரியமாகத் தோன்றலாம். ஆனால் ஒரு நீண்ட (மாரதான்) ஓட்டப்பந்தயமும் நாம் ஒவ்வொன்றாக எடுத்து வைக்கும் அனேக ஒவ்வொரு அடிகளை கொண்ட ஒரு ஓட்டம் ஆகும். மேலும் அவ்விதமானதொரு ஓட்டத்தை ஓடபெலன் தருவதாக தேவன் நமக்குக் கூறியுள்ளார். அவருடைய குமாரனை நாம் பின்பற்றும்படி நமக்கு கட்டளை இட்டுள்ளார். அவரைப் போலவே (குமாரனைப்போலவே) ஒவ்வொரு படியாக வளரவும், பாடுகளின் மூலம் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ளும்படியும் செய்கிறார். இப்படியாகக் கீழ்ப்படிபவர்கள் யாராக இருந்தாலும், ஒருவேளை அவர்கள் ஞானமுள்ளவர்களாகவோ அல்லது சாதாரணமானவர்களாகவோ இருந்தாலும் அவர்களுடைய வேதனைகளின் மத்தியில் தம்மை அவர் வெளிப்படுத்துகிறார். அவர்கள் அவ்வாறு வேதனைகள் போராட்டங்களினூடே அவருடைய குமாரனோடே ஐக்கியமாகிறார்கள். மேலும், படிப்படியாக அவர்கள் உண்மையிலே கிறிஸ்து யார் என்பதைக் கற்றுக்கொண்டு அவரது சாயலுக்கு ஒப்பாக மாறுகிறார்கள்.

## தேவனுடைய பிள்ளைகள்

உண்மையிலேயே நாம் எல்லோரும் தேவனுடைய பிள்ளைகள் அல்லவா? மேலும் நாம், அவருடைய அன்பினாலே ஜெநிப்பிக்கப்பட்டு, அவருடைய பிள்ளைகள் என்பதை ஒருவருக்கொருவர் மீதுள்ள நமது அன்பின் மூலம் வெளிப்படுத்துகிறோம். நாம் அவரில் அன்பு கூருகிறோம். ஏனெனில் அவரே முதலில் நம்மில் அன்பு கூர்ந்தார். மேலும் புத்திர சுவிகாரம் என்பது நாம் எதை செய்கிறோம் என்பது அல்ல. ஆனால் எதை நாம் பெற்றுள்ளோம் என்பதாகும். அது நாம் சம்பாதித்தது அல்ல, அது நமக்குக் கிடைத்த ஒரு ஈவு.

“பாருங்கள், ஆச்சரியமான ஈவாகிய அவ்வன்பை

பொழிந்திட்டாரே, பிதா நம்மீது அன்று;

பாவிகளான மனித குமாரர்களாகிய நம்மை

அழைத்திட்டாரே, தேவகுமாரர்கள் என்று”.

# தேவனுடைய வாக்குத்தத்தங்களின் ஆதாரம்

**(சுவிசேஷத்தின் வளர்ச்சி)**

முதலாம் நூற்றாண்டில் (சத்தியத்தை) பின்பற்றின மக்கள் அசாதாரண காரியங்களைச் செய்ததாக சொல்லப்பட்டதை ஜனங்கள் எப்படி உண்மையென வகையறுத்தனர்? அவர்கள், இயேசுகிறிஸ்துவை மரித்தோரிலிருந்து தேவன் எழுப்பினார் என்று சொன்னதுமன்றி, இயேசுவைக்குறித்து யூதத்தலைவர்களும், ரோம அரசாங்கத்தின் அதிகாரிகளும் தவறான தீர்ப்பு செய்தார்கள் என்றும் சொன்னார்கள். எல்லோரும் இயேசுவின் மீட்பின் கிரியை குறித்து அறிந்து ஏதாவது செய்யவேண்டும் என விரும்பினர். ஜான் ஹெல்லாவெல் அவர்கள், இயேசு உயிர்த்தெழுந்தார் என்று சாட்சி பகர்ந்த அப்போஸ்தலரின் கிரியைகளையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் அறிந்து இதை எழுதுகிறார்.



### சப்பாணி (முடவன்) சொஸ்தமானான்

ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்தில் பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்குப் போனார்கள். அவர்கள் அலங்காரவாசல் (அரிதான விலைமதிக்க முடியாத வெண்கல வேலைப்பாடுகளினால் அலங்கரிக்கப்பட்ட வாசல்) என்று சொல்லப்படும் தேவாலய வாசலில் நுழையும்போது, தாயின் வயிற்றிலிருந்தே சப்பாணியாய் பிறந்த ஒரு மனுஷனை வாசலருகே கண்டனர்.

அவனுக்கு 40 வயதிருக்கும் (அப்போஸ்தலர் 4:22 வசனம் பார்க்கவும்). இப்படி அனுதினமும் ஒவ்வொரு நாளும், வருஷகாலமாய், அவனைச் சுமந்துவந்து பிச்சை கேட்கும்படி அங்கே வைத்தனர்.



இரண்டு அப்போஸ்தலர்களும் சிறிது நேரம் நின்றனர். அவர்கள் அவனைப் பார்த்து "எங்களை உற்றுப்பார்" என்று சொல்ல, முடவன் ஏதாவது பண உதவி கிடைக்கும் என எதிர்பார்த்தவாறு அவர்களைப் பார்த்தான் "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை" என்று பேதுரு சொன்னமாத்திரத்தில், அவன் ஏமாற்றம் அடைந்தான். ஆனால் பேதுரு, அவற்றைவிட மேலான ஒன்றை தன்னிடத்தில் இருப்பதைக் கொடுப்பதாகச் சொன்னான்.

*"அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி" (அப்போஸ்தலர் 3:6.)*

பேதுரு அவனைத் தன் வலது கையினால் தூக்கிவிட, உடனே அவன் முற்றும் மாறுப்பட்டவனாய், பெலன் கொண்டவனாய் எழுந்தான். அவன் முன்பு எழும்பி நின்று நடக்காதவனாயிருந்தபோதும், இப்போது குதித்து, எழுந்து, நின்று நடந்தான். இது ஒரு வெளியரங்கமான அற்புதம். (அப்போஸ்தலர் 4:16 பார்க்கவும்). ஏனென்றால், வளருகின்ற சிறு குழந்தையும் எழும்பி கற்றுக்கொண்டு, பிறகு, ஒவ்வொரு அடியாய் நடந்து, பிறகு தானே குதிப்பதும், நன்றாக நிற்பதுமாய் இருக்கும். ஆனால், இவையெல்லாம் ஒரே நொடிப்பொழுதில் நடந்தது. நலிந்து மெலிந்த தசைகள் உறுதிகொண்டு கடினமான உடற்கூறு சாஸ்திரங்களெல்லாம் சரியாக்கப்பட்டு கிரமமாக இணைந்து செயல்பட்ட ஒரு காரியமாகும்.

### மிகப் பெரிய எழுச்சி (சந்தோஷம்)

முடவனின் மிகப்பெரிய மகிழ்ச்சியினால் அவன் தேவனை ஆராதித்தான். அவனது குரலும், செய்கையும் அந்த வளாகத்திலிருந்த அனைவரின் கவனத்தையும் கவர்ந்ததாயிருந்தது. அவர்கள், "அவன் அலங்கார வாசலில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்த மனிதன் என்று கண்டு அவனுக்குச் சம்பவித்ததைக் குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்" (அப்போஸ்தலர் 3:10).

ஜனங்களெல்லாம் பிரமித்து, அதிசீக்கிரமாய் சாலொமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்திலே கூடிவந்தனர். குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும் பற்றிக் கொண்டிருந்தான். பெந்தேகொஸ்தே நாளில் பேதுரு பேசினபோது ஆச்சரியப்பட்ட ஜனங்கள், இது மற்றும் ஒரு அற்புத நிகழ்ச்சியென்று வியந்தனர்.

பேதுரு இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுவதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுய பக்தியினாலாவது இவனை நடக்க பண்ணினோம் என்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?" என்று சொல்லி, அவர்கள், இந்த அற்புதத்திற்கு

தாங்கள் காரணர் அல்ல, கர்த்தரே காரண என்று முக்கியப் படுத்தி பேசினர்.

## அற்புதத்தின் காரணர் இயேசு கிறிஸ்து

பேதுரு ஜனங்களை நோக்கி “ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன், தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்” என்று விளக்கினான். மற்றும் சில மாதங்களுக்கு முன்பு இயேசுவைக்குறித்து அவர்கள் செய்த காரியத்தை நினைவு படுத்தினான்.

அவர்கள் இயேசு கிறிஸ்துவை எல்லாவிதத்திலும் மறுதலித்து, ரோம அதிகாரியாகிய பொந்தியு பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தனர். பிலாத்து மூன்றுமுறை இயேசுவை விடுதலை பண்ண மனதுடையவனாய் அவர் குற்றமற்றவர் என சொல்லி விடுதலை பண்ண யோசனையாயிருந்தான். ஆனால் ஒருவனைக் கேதுசெய்ய போதை பொருட்களும் மக்களை அடிமைப்படுத்தியதாக நவீன காலத்தின் காரணங்களும் உள்ளன. மது பழக்கத்திற்கு அடிமையாவதைக் குறித்து வேதாகமத்தில் நாம் காணலாம். அழிவுக்கேதுவான நிலைமைப்பற்றி நீதிமொழிகள் 29:35ல் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இந்த வசனத்தின் முடிவில் *“......நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்”* என்று முடிவடைவதால் மனிதனின் அவல நிலைமையை அறியலாம்.

அதிகமாக மது அருந்துதல், மனிதனின் ஈரலையும், மூளையையும் மற்றும் இருதயத்தையும் அதிகமாக பாதிக்கும். மேலும் மது, புகையிலை போன்ற போதைப் பொருட்கள் ஒருவனை அடிமைப்படுத்தும் தன்மையுள்ளது. பழைய ஏற்பாட்டில் அதிகமாக மது அருந்துவதைக் குறித்து கண்டித்து, உணர்த்துகிறதுபோல, புதிய ஏற்பாட்டிலும் நம்முடைய மனதையும், சரீரத்தையும் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. 1 தீமோத்தேயு 5:23ல் *“உன் வயிற்றிற்காகவும் உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சை ரசமும் கூட்டிக்கொள்'' என்று சொல்லப்பட்டாலும்,* அவ்வார்த்தையில் பவுல் இதைக்குறித்து இன்னும் தெளிவாக கீழ்கண்டவாறு சொல்லியிருக்கிறான்.

*“துன்மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறி கொள்ளாமல் ஆவியினால் நிறைந்து”* இருக்கவேண்டும், என்று எபேசியர் 5:18ல் சொல்லப்பட்டுள்ளது.

## பொறுப்பும் ஆதரவும்

வேதாகமத்தின் விளக்கங்கள் அக்காலத்திற்கேற்ற சரீர வியாதிகளைக் குறித்த குறிப்புக்களை தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்டவை நிறைவேறும்படி இப்படி நடந்தது. பேதுரு நடந்த எல்லாவற்றையுங் குறித்து தீர்க்கதரிசிகள் மூலமாய் சொல்லப்பட்டவற்றைத் தெளிவுபடுத்தினார். இதிலிருந்து, வேதாகம படிப்பிற்கு செல்லும் எல்லா மாணவர்களும், இயேசு கிறிஸ்துவைப் புதியஏற்பாட்டில் மாத்திரம் காணாமல், முழு வேதத்திலும் காணலாம் என்று வலியுறுத்தி சொல்கிறார். பேதுரு,



யோவான் மற்றும் இதர சீடர்களுக்கு, பழைய ஏற்பாட்டின் வேத வசனங்கள் எப்படி அவரை எடுத்துக் காட்டுகின்றன என (லூக்கா 24:44-48) காணலாம். இவை எத்தனை ஆச்சரியமான அனுபவங்களாய் அவர்களுக்கு இருந்தன.

பேதுரு, அவர்கள் நினைப்பதற்கு மாறாக, அவர்களை உற்சாகப்படுத்தி, “இப்போது நீங்கள் மனந்திரும்பி பாவ மன்னிப்பைப் பெறுங்கள்'' என்று (அப்போஸ்தலர் 2:38) விளக்குகிறான். ‘மனந்திரும்புதல்’ வெறுமனே, ‘ஐயோ நான் செய்தது தவறு’ என்று சொல்வதில்லை, அது ‘மறுபடியும் திரும்பு’ என்று வேறு மொழிபெயர்ப்பில் (RSP) விளக்கப்பட்டுள்ளது. நாம் இயேசுவுக்கு நேராக நம்மை திருப்பும்போது, நம் முழு வாழ்க்கையும் வேறு திசையில் திரும்புவதாகும். பேதுரு தன்னைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு, இப்படி மனந்திரும்புவதினிமித்தம் கடந்த காலத்தின் பாவங்களிலிருந்து மன்னிப்பை பெறமுடியும் என்று விளக்கினான். இது அவர்களுக்கு மாத்திரம் அல்ல, நமக்கும் பொருந்தும்.

உண்மையான கிறிஸ்துவின் தன்மை உணர்வு மனந்திரும்புதல், நம்பிக்கை, விசுவாசம், மற்றும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவது ஆகும். முழுகி ஞானஸ்நானம் என்று குறிப்பிட்டு வேதத்தில் சொல்லப்படவில்லை என்றாலும், ஞானஸ்நானத்தைக் குறித்து கீழ்கண்ட வசனங்களில் பார்க்கலாம்.

அப்போஸ்தலர் 2:41,47; மற்றும் 8:12-13; 9:18, 10;47,48; 16:15, 16:33, 18:8; போன்ற வசனங்களில் பார்க்கலாம். இயேசுவின் சீடனாக அவரின் வழிகளைக் கற்று, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க இது ஒன்றே வழி.

## இயேசு மறுபடியும் வருகிறார்

பேதுரு, இயேசு பரலோகத்திலிருந்து இறங்கி பூமியில் அரசாள வருகிறார் என்ற முக்கியமான கருத்தையும் போதிக்கிறார். இதைக்குறித்து சொல்லும்போது, “எல்லாவற்றையும் நிலைநிறுத்த” என்று தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்டவற்றை விளக்குவதாக உள்ளது. உதாரணமாக, ஏசாயா 2:4ல் ஏசாயா 11:2-9 வசனங்களில் *“அவர் ஜாதிகளை நியாயந்தீர்க்க வருவார். அந்த காலத்தில் அநியாயம் இல்லை. தீங்கு செய்வாரில்லை, கேடு செய்வாரில்லை”* என்று சொல்லப்பட்டுள்ளது. ஏசாயா 35:1-7ல் தீர்க்கதரிசி இப்படியாய் சொல்லியிருக்கிறார். *“வனாந்திரமும், வறண்ட நிலமும் மகிழ்ந்து கடுவெளி களித்து, புஷ்பத்தைப் போல செழிக்கும், மிகுதியான செழிப்பும் நிறைந்த இடமாக இருக்கும்”* மற்றும் *“அங்கு அழுகையும் துக்கமும் நினைக்கப்படுவதில்லை / கேட்கப்படுவதில்லை”* என ஏசாயா 65:17-25ல் சொல்லப்பட்டுள்ளது.

*“மோசேயைக் காட்டிலும் பெரிய தீர்க்கதரிசியை எழுப்புவேன்''* என்று சொல்லப்பட்டது இயேசுவையே குறிக்கும் என்று பேதுரு விளக்குகிறார். மோசேக்குப்பின் பிறகு எழும்பின எல்லா தீர்க்கதரிசிகளும் இதைக்குறித்து

தெளிவாக கூறியுள்ளனர். இயேசுவின் வாழ்க்கையையும், அவரின் செயல்களையும் குறித்தும் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டதிலிருந்து முழு வேதத்திலும் கிறிஸ்துவை பற்றி கூறப்பட்டுள்ளது. முழு வேதத்திலும் கிறிஸ்து என சொல்லப்பட்டுள்ளது.

### ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்

ஆதியாகமம் புஸ்தகத்தில் நம் முற்பிதாவாகிய ஆபிரகாமிற்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தைப் பார்ப்போம், என பேதுரு அங்கு கூடியிருந்தவர்களுக்குக் கூறினார்.

*“நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்”* என்றார். (ஆதியாகமம் 22:18) இந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமின் இயற்கை சந்ததிக்கு மாத்திரம் உரித்தல்ல அது முழு உலகத்திற்கும் சொந்தமான ஒரு நற்செய்தி என்று பவுல் அப்போஸ்தலர் கலாத்தியிருக்கு எழுதின நிருபம் 3:27-29ல் வாசிக்கிறோம். அந்த தேவாலயத்தில் பேதுரு தம்மை கேட்டுக் கொண்டிருந்த எல்லா யூதர்களையும் குறித்து அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்ள முதற் பேறானவர்கள் என்று சொல்லுகிறார்.

பேதுரு இவைகளைக் குறித்து பேசிக்கொண்டிருக்கும்போதே, தேவாலயத் தலைவர்கள் வந்து, இவர்களை ஆலோசனை சங்கத்தை விட்டு வெளியே போகச் சொன்னதினிமித்தம் தடைப்பட்டது. பிறகு என்ன நடந்தது என அடுத்த அத்தியாயத்தில் கர்த்தருக்குச் சித்தமானால் பார்ப்போம்.

**ஜான் ஹெல்லா வெல்**

# என் வாழ்வை மாற்றின நாட்கள்

**(பார்வோனின் பானபாத்திரக்காரன்)**

நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். ஒருநாட்காலை எனது எகிப்திய ராஜாவுக்குக் காலை பானத்தை அளிக்க அரண்மனையின் சாப்பாட்டு அறையில் நான் நுழைந்தபோது திடீரென காவலாட்கள் எனது வழியை மறிப்பதைக் கண்டேன். எனக்கு அவர்களை நன்றாகத் தெரியும். ஏதோ தமாஷ் பண்ணுகிறார்களென முதலில் நினைத்தேன். ஒரு சில மணி நேரத்தில் அசுத்த நெடி வீசும் ஒரு பாழடைந்த அறையில் ராஜாவின் சுயம்பாகியோடு நான் அடைக்கப்பட்டேன். பார்வோனின் உயிருக்கெதிரான ஒரு சதி நடந்திருக்கிறது போலும். அந்தச் சூழ்ச்சிக்கு எங்களில் யார் காரணமென அதிகாரிகளுக்குச்





சரியாகத் தெரியாததால் எங்களிருவரையும் கைது செய்தனர்.

நான் குற்றமற்றவனென்பது எனக்கு நன்றாய்த் தெரியும்; ஆனால் அதினால் எந்த பிரயோஜனமும் இல்லை. நான் ராஜதுரோகி என நிரூபிக்கப்படுவேனால் ஒரு சில நாட்களில் கொல்லப்படுவேன் என்பது தெளிவு. என்றபோதிலும், ஏறத்தாழ இருபது வயதுடைய யோசேப்பு என்னும் ஒரு எபிரெய வாலிபன் சிறைச்சாலையில் எங்களுக்கு வேலைக்காரன் போல செயல்பட்டு வந்தான். சிறைச்சாலைப் பொறுப்பாளரை விட அதிக பொறுப்புள்ளவன் போல் அவன் தோன்றினான். அவன் காரியங்களை அமைதியாகவும் நேர்மையாகவும் செய்தான். அவனை அனைவரும் நம்பினர்; சிறையிலுள்ள எல்லோரும் அவனை விரும்பினார்கள். அவனும் தவறான குற்றச்சாட்டினால் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். அவன் மீது குற்றம் சாட்டியவர்கள் அவனைப் பற்றி மறந்துவிட்டனர், அவனை சிறையிலேயே விட்டு விட்டனர்.

### சொப்பனத்தைச் சொல்லுதல்

சில வாரங்களுக்குப் பின் அதிகாரிகள் கூட எங்களை மறந்து விட்டது போல் தோன்றியது; நான் மனதளவில் மிகவும் சோர்ந்துபோனேன். பின்பு ஒரு நாள் இரவு உயிர்க்களை வாய்ந்த ஒரு சொப்பனத்தை நான் கண்டேன். சுயம்பாகியிடத்தில் அதைச் சொன்னேன். அவனும் ஒரு வண்ணமிக்க சொப்பனத்தைப் பார்த்திருக்கிறான். அவன் தலைமேல் வைக்கப்பட்டிருந்த

கூடையில் இருந்த உணவைப் பட்சிகள் கொத்துவதாக இவனது சொப்பனம் இருந்தது.

நாங்களிருவரும் கவலை தோய்ந்த முகத்தோடு, கேள்விக்குறியோடு இருந்ததைக் கண்ட யோசேப்பு தான் ஏதாவது உதவி செய்யவா என்று கேட்டான். சிறையிலிருந்து நாங்கள் விடுதலை பெறுவது முடியாததுபோலத் தோன்றுகிறது என அவனிடம் சொன்னேன். எனது சொப்பனத்தில் நான் திராட்சச் செடியிலிருந்து திராட்சப் பழங்களைப் பறித்து, அதன் ரசத்தை ஒரு சிறந்த கிண்ணத்தில் பார்வோனுக்கு கொடுப்பதைப் பற்றிச் சொன்னேன். உடனடியாக சுறுசுறுப்பாக யோசேப்பு எதையோ நினைப்பதைப்போலத் தோன்றியது. சொப்பனங்களின் அர்த்தத்தை அறிய அவன் வணங்கின தேவன் துணை செய்தார்போலும். “கவலைப்படாதீர்கள் சொப்பனமம் மிகவும் எளிதானது. இன்னும் 3 நாட்களில் பார்வோனுக்கு நீங்கள் திரும்ப சேவை செய்வீர்கள்” என்றான் அவன். அவன் சொன்னது துல்லியமாக நிறைவேறியது. மூன்று நாளைக்குப் பின் நான் குற்றமற்றவன் எனத் தீர்க்கப்பட்டு எனது முந்தைய வேலைக்குத் திரும்பினேன். சுயம்பாகி? ராஜதுரோகத்துக்காக அவன் கொல்லப்பட்டான். அவனது சொப்பனமும் அப்படியே நடந்தது. கொத்துகின்ற பறவைகள் தூக்கிலிடப்படுவதற்கு அடையாளமாயிருந்தன.

### யோசேப்பின் கதி என்ன?

இந்த ஆச்சரியமான சம்பவத்திற்குப் பின்னும் சிறந்த சேவையளிப்பதில் நான் மிகவும் மூழ்கிப்போனபடியினால் யோசேப்பைப் பற்றி நான் மறந்துவிட்டேன். மிகவும் அன்பான அவன் தன்னை நினைத்துக் கொள்ளும்படி என்னை கேட்டுக்கொண்டிருந்தான். இரண்டு ஆண்டுகளுக்குப் பின், இன்னொரு சொப்பனத்தின் காரணமாய் யோசேப்பையும் அவனது அர்த்தஞ்சொல்லும் திறமையையும் நினைவு கூர்ந்தேன். பார்வோன் சில கால்நடைகளைப் பற்றி ஒரு கனவு கண்டார். அக்கால் நடைகளில் ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தை பட்சித்துப் போட்டது. மூடநம்பிக்கை மிக்க ராஜா தனது சொப்பனத்தின் அர்த்தத்தை அறிய விரும்பினார்.

எனது குற்றத்தை உணர்ந்தவனாய், அதிகாரிகளோடு யோசேப்பைச் சந்திக்க சிறைக்கு விரைந்தேன். அந்த ஏழை மனிதன் எனக்கு உதவினான். ஆனால் இதுவரை அதற்குப் பிரதிபலனாக நான் அவனுக்கு ஏதும் செய்யவில்லை. என்னுடைய முட்டாள்தனத்திற்கு பின்பு பார்வோன் ராஜா என்னை மிகவும் கடிந்து கொண்டார்.

### பிரதம மந்திரி

இப்போது யோசேப்பு பிரதம மந்திரியாயிருந்து நாட்டை நடத்திக்கொண்டிருக்கிறார், எனது வாழ்வும் பெருமளவுக்கு மாறிவிட்டது.



பார்வோனின் சொப்பனம் நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றியதென யோசேப்பு அவருக்கு விளக்கினார். ஏழு வருட மகத்தான விளைச்சலும் அதைத் தொடர்ந்து ஏழு வருட பஞ்சமும் இருக்கும். நாங்கள் இப்போது பஞ்ச காலத்தில் இருக்கிறோம். யோசேப்பு தான் ஒரு புத்திசாலித்தனமான தலைவரென்பதை நிரூபித்து விட்டார். உணவு மக்கள் மத்தியிலே பகிர்ந்து கொள்ளப்படுகிறது. யோசேப்பின் குடும்பத்தாரும் உணவு வாங்க வந்தனர். சொப்பனங்களை வெளிப்படுத்துகின்ற இந்த வல்லமையான தேவனை அனைவரும் ஆராதிக்க ஆரம்பித்து விட்டார்கள், போலத் தோன்றுகிறது.

நான் பார்வோனையும் யோசேப்பையும் உண்மையாகச் சேவிக்க முயலுகிறேன். தனது குடும்பத்தினரும் மற்ற யாவரும் பஞ்சத்தில் பாதுகாக்கப்படும்படி ஆண்டவர் தன்னை எப்படி சிறைவாழ்வுக்குள்ளாய் நடத்தினாரென்பதை அவர் எனக்கு விவரித்தார். தேவனை எப்படி சிறப்பாய் சேவிப்பதென்பதை உலக மக்களனைவரும் யோசேப்பின் மக்களாகிய ஒரு சிறப்பான மக்கள் மூலமாக புரிய வைப்பதற்காக தேவன் போட்ட திட்டத்தின் ஒரு பகுதியாகும் அது. எனக்கு அது முழுவதும் புரிவதில்லை. யோசேப்பின் தாத்தாவாகிய ஆபிரகாமுக்குத் தேவன் செய்த வாக்குத்தத்தங்களைப் பற்றியது அது. எனது வாழ்வு பாதுகாக்கப்பட யோசேப்பு உதவினாரென எனக்கு நன்றாகத் தெரியும். எனவே யோசேப்பின் தேவனைக் குறித்து நான் தேட ஆரம்பித்திருக்கிறேன். அவர் மிகவும் சுவாரஸ்யமானவராகத் தோன்றுகிறார்!

**ஆதியாகமம் 40 & 41 வாசிக்கவும்.**

**ஸிந்தியா மைல்ஸ்**

# செயல்கள் பேசும்

## சிறிய தியானம்

“செயல்கள் வார்த்தைகளைவிட சத்தமாக பேசும்” என்பது ஒரு பழமொழி. இதைச் சிறுவயதிலிருந்தே நாம் கேள்விப்பட்டு இருப்போம். யாரும் இந்த உண்மையை மறுக்காவிட்டாலும், நாம் பேசுவது ஒன்றாகவும் செய்வது வேறுவிதமாகவும் இருக்கிறது.

நாம் யாரை ஏமாற்றுகிறோம் என்பது அனேக தடவை நமக்கு வியப்பாக இருக்கிறது? நிச்சயமாக தேவனை அல்ல. நம் குடும்பத்தினருக்கும் நம் நண்பர்களுக்கும் நம்மைக் குறித்து நன்றாகத் தெரியும். எனவே ஒருவேளை நாம் நம்மைத்தான் ஏமாற்றிக் கொள்கிறோம்.



'உண்மைதான்' வாழ்க்கையில் மிகவும் மேன்மையான காரியம் என நன்மை நாம் கூறலாம். மேலும் தேவனை நமது முழுஉள்ளத்தோடு நேசிப்பதாகக் கூறலாம். எனினும் பிரசங்கம் செய்யவேண்டிய நேரம் வரும்போதோ, வேதபாட வகுப்புக்குச் செல்லும் நேரம் வரும்போதோ, நாம் மிகவும் களைத்துப் போவோம், அல்லது வேறு இடம் செல்பவர்களாகிவிடுவோம்.

நாம் மற்றவர்கள் கேட்கும்படி ஒருவேளை இப்படி பேசலாம்: தொலைகாட்சிபெட்டி ஒரு அருமையான கண்டுபிடிப்பு என்று, ஆனால் நேரத்தை வீணாக்கும் மோசமான காரியம் என்றும், எனவே அதை நாம் பார்ப்பது மிகவும் குறைவு என்றும், எனினும் யாராவது ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை பார்த்ததாக கூறும்போது மெதுவாக நாம்கூட அதை பார்த்ததாகவும், கூறி மேலும் சிலநேரம் கழித்து இன்னொரு காட்சியில் நாம் பார்த்த காரியங்களை விளக்கிக்கூறவும் ஆரம்பிப்போம்.

அனேக சமயங்களில் நாம் ஒரு காரியத்தைச் செய்வதற்கும், செய்யாமல் இருப்பதற்கும் உண்மையான காரணங்கள் இருக்கும். ஆனால் அந்த காரணங்களை நாம் நமக்குள்ளேயே வைத்துக்கொண்டு, அதை ஏன் செய்தோம் அல்லது செய்யாமல் விட்டோம் என்பதற்கு அனேக தொடர்ச்சியான காரணங்களை காண்பிப்போம். சிலநேரங்களில் ஒரு சிறுபிள்ளை இதைச்



செய்யும்போது மனதாரச் சிரிப்போம், ஏனெனில் மற்றவர்களிடம் காண்பது மிகசுலபம், ஆனால் நாமும் வளர வேண்டுமல்லவா? பவுல் கூறினார் *"நான் குழந்தையாய் இருந்தபோது குழந்தையைப்போல பேசினே. குழந்தையைப்போல சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன், நான் புருஷனானபோதோ குழந்தைக் கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்"* (1. கொரிந்தியர் 13:11)

நமக்கு நாமே உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். நமது செயல்கள் நாம் சொல்வதைவிட மிகச் சத்தமாகப் பேசுகின்றது என்பதை நாம் உணர்ந்துகொள்வது அவசியம். கர்த்தரை நம் முழு உள்ளத்தோடு நேசிக்கின்றோம் என்பதை மற்றவர்களுக்குச் சொல்லவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் நாம் உண்மையிலேயே நேசித்தால், நாம் எப்படி நடந்துக் கொள்கின்றோமோ, எதை செய்கின்றோமோ அவைகளின் மூலம் அதுதெளிவாகத் காணப்படும். அதற்குப் பதிலாக வீட்டின் கூரை மீதிருந்து கர்த்தரை நாம் எவ்வளவாக நேசிக்கின்றோம் என்று சப்தமாக கூறலாம். ஆனால் அது யாரையும் நம்பச் செய்யாது. ஏனெனில் நம் செயல்கள் தேவன் நம் வாழ்வில் இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

இந்த குறிப்பையே யாக்கோபு (2:28) கூறும்போது, *''விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்தாயிருக்கும் ஒருவன், உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு, கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே."*

நமக்கு தேவை ஒரு ஜீவனுள்ள விசுவாசம், மரித்த விசுவாசம் அல்ல. கிரியைகளில்லா விசுவாசம் செத்ததாகும். இயேசு இதை இன்னொருவகையில் "அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிவீர்கள்" என்று கூறுகிறார். இயேசு பார்த்த, இலைகள்மூடி கனிகளற்ற அந்த அத்திமரம் கிரியைகளில்லாத வெறும் வார்த்தைகள் பேசுகிற மனிதனுக்கு ஒத்திருக்கிறது. இயேசு அதைச் சபித்தார், அது பட்டுப்போயிற்று என்பதை நாம் நினைவு கூரவேண்டும்.

பிதா திராட்சத்தோட்டத்தின் உரிமையாளர், நாமெல்லாரும் செடிகள். என்னவிதமான கனிகள் நம்மிடம் உண்டென்பதைக் காண இயேசு விரைவில் வரபோகின்றார், அவர் காண்பாரா?

இலைகளால் மூடியிருப்பது மாத்திரம் போதாது, கனி இருக்கவேண்டும். நல்ல பேச்சைப்பேச போராடுவது மாத்திரம் போதாது. பவுல் சொல்கின்றார்: நல்ல போராட்டத்தைப் போராடினேன். இது கிரியையைக் குறிப்பிடுகின்றது. வார்த்தைகளைவிட செயல்கள் சப்தமாக பேசுகிறது என்பதை நினைவில் கொள்ளவும், நமது கிரியைகள் என்ன சொல்லுகின்றது?